**சுற்றாடல் அமைச்சு**

# அதிகரித்துள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு இலங்கையில் உள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் மீள்தன்மையை வலுப்படுத்தல் (ADAPT4R)

# திட்டப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு

இலங்கையின் உலர் வலயத்தில் உள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் காலநிலை மாற்ற தகவமைப்புத் திறன் மற்றும் உணவு பாதுகாப்பை வலுவூட்டுவது மேலுள்ள திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இந்தத் திட்டம் இணைந்த உற்பத்தி, பரப்புதல் மற்றும் அதிகரித்தலின் வடிவமைக்கப்பட்ட விவசாய காலநிலை மற்றும் நீர் காலநிலை ஆலோசனைகளுக்கான முறைமைகளை உருவாக்க இறுதி வாடிக்கையாளர் வரை காலநிலை சேவைகளை (LMCS) பயன்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட குழுக்களின் அணுகலை வலுப்படுத்த உதவுவதோடு நடைமுறைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட, காலநிலை – மீள்தன்மை வாழ்வாதாரங்களை மேம்படுத்தலை உருவாக்குவதில் காலநிலை ஆலோசனைகள் மூலம் அறிவிக்கப்பட்ட உளளூர் ஏற்புழக்க மேம்பாடு மற்றும் செயற்படுத்தலுக்கு பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது அவதானம் செலுத்துவதுடன் அதிக காலநிலை அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்கும் வறிய விவசாய குடும்பங்களின் ஏற்புழக்கத்தை மேம்படுத்துகிறது.

சுற்றாடல் அமைச்சு நிறைவேற்று நிறுவனமாகவும் உலக உணவுத் திட்டம் (WFP) பல்துறை செயலாக்க நிறுவனமாகவும் உள்ளது.

இந்தத் திட்டத்தின் நிறைவேற்று நிறுவனமாக சுற்றாடல் அமைச்சு இருப்பதோடு பல்துறை செயலாக்க நிறுவனமாக உலக உணவுத் திட்டம் (WFP) உள்ளது. தேசிய மற்றும் துணை தேசிய அளவில் பல்தரப்பு பங்குதாரர் அமைப்புகளுடனான கூட்டிணைவில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தின் மானியத் தொகை 6,997,762 அமெரிக்க டொலர்கள் என்பதோடு திட்டக் காலம் 2025 – 2029 வரை 5 ஆண்டுகளாகும். இந்தத் திட்டம் மொனராகலை, குருநாகல், திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி மேலுள்ள திட்டத்தின் 6 மாவட்டத்திற்காகவும் கொழும்பில் உள்ள தேசிய திட்ட நிறைவேற்றுக் குழு (NPET) மற்றும் திட்ட அமுலாக்கல் பிரிவுகளுக்கு (PIUs) திட்ட பணியாளர்களின் ஆட்சேர்ப்புக்காக சுற்றாடல் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் பின்வரும் பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை | முழு நேரம்/பகுதி நேரம் | சம்பள அளவு |
|---|---|---|---|---|
| 01 | தேசிய திட்ட இணைப்பாளர்கள் | 01 | முழு நேரம் | PS 1 |
| 02 | நிதி முகாமையாளர் | 01 | முழு நேரம் | PS 3 |
| 03 | திட்ட கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் முகாமையாளர் | 01 | முழு நேரம் | PS 3 |
| 04 | மாவட்ட அமுலாக்கல் முகாமையாளர்கள் | 06 | முழு நேரம் | PS 3 |

01. **தேசிய திட்ட இணைப்பாளர் - பதவி 01 - கொழும்பு**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் (விவசாயம், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், பொறியியல், சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம் முதலியன) இளமாணி பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

- தொடர்புடைய துறையில் இளமாணி பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று.

**அத்துடன்**

- தொடர்புடைய துறையில் (விவசாயம், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், திட்ட முகாமைத்துவம், காலநிலை மாற்றம், பொது நிர்வாகம்) பட்டப்பின்படிப்பு தகைமை ஒன்று ((முதுமாணி/ பட்டப்பின்படிப்பு)

**மற்றும்**

- தொடர்புடைய துறையில் முகாமைத்துவ திட்டங்களில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்.
- வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நிர்வகிப்பதில் உள்ள அனுபவம் மேலதிக தகைமை ஒன்றாக அமையும்.

02. **நிதி முகாமையாளர் - பதவி 01 – கொழும்பு**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் (நிதி, வர்த்தகம், வர்த்தக முகாமைத்துவம் மற்றும் கணக்கியல்) இளமாணி பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

- தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று.

**மற்றும்**

- தொடர்புடைய துறையில் அரசின் அகில இலங்கை சேவை வகுப்பு 111/11 அல்லது அதற்கு மேல் அல்லது அதனையொத்த அந்தஸ்துடைய அதிகாரி ஒருவர்

**அல்லது**

- தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ இதனையொத்த தொழில்முறை தகைமையை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

- தொடர்புடைய துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம்.
- வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நிர்வகிப்பதில் உள்ள அனுபவம் மேலதிக தகைமை ஒன்றாக அமையும்.

03. **திட்ட கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் முகாமையாளர் - பதவி 01 – கொழும்பு**

- தொடர்புடைய துறை, அல்லது தொடர்புபட்ட துறை ஒன்றில் (சுற்றுச்சூழல், வர்த்தக நிர்வாகம், பொது நிர்வாகம், முகாமைத்துவம், மனித வளங்கள் முகாமைத்துவம்) இளமாணி பட்டம்

**மற்றும்**

- தொடர்புடைய துறை ஒன்றில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி பட்டம்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா)
- முன்னேற்ற அறிக்கையிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, தரவுத்தள முகாமைத்துவத்தில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம்.
- சர்வதேச கொடை நிறுவனம் மற்றும்/ அல்லது ஐ.நா நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பில் அனுபவம்.
- திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் சான்றிதழ் அல்லது டிப்ளோமா மேலதிக தகைமையாக அமையும்.

04. **மாவட்ட அமுலாக்கல் முகாமையாளர்கள் - குருநாகல், மொனராகலை, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் (விவசாயம், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், பொருளியல், சமூக விஞ்ஞானம், பௌதீகவியல் முதலியன) இளமாணி பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

- தொடர்புடைய துறையில் இளமாணி பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று.

**அத்துடன்**

- சுற்றுச்சூழல் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம்
- வலுவான பங்காளர் ஒருங்கிணைப்பு, தொடர்பாடல் திறன்கள் மற்றும் குழு வேலை அவசியமாகும்.

**பொது நிபந்தனைகள்:**

**தேர்வு முறை:** தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

**வயது:** 01/2029 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின்படி.

**பணிக்காலம்:** அனைத்து நியமனங்களும் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் அமைவதோடு செயல்திறன் அடிப்படையில் நீடிக்கப்படும்.

மேலுள்ள பதவி நிலைகளுக்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) மற்றும் அடிப்படை விண்ணப்ப வடிவத்தை www.climatechange.lk மற்றும் www.env.gov.lk. என்ற முகவரியில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

மேலுள்ள பதவி நிலைகளுக்காக சுயவிபரக் கோவையுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025.05.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர், காலநிலை மாற்ற செயலகம், சுற்றாடல் அமைச்சு, "சொபாதம் பியச", 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு தகுதிபெற்ற அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்களை அனுப்ப சுற்றாடல் அமைச்சு கோருகிறது.

தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை ஏற்கப்படமாட்டாது.

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு,**
**பத்தரமுல்ல.**